இலங்கையில் இந்தியருக்கு ஆபத்து

(:0:)

தொழிலாளர்களை உடனே விரட்ட முடிவு

(0)

இந்திய வர்த்தக சங்கத்தாரின் விபரீத போக்கு

இலங்கையில் இந்திய மக்கள் நாளுக்குநாள் பல தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர். முன்னர் அங்குள்ள இந்தியர்கள் இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் உறவினர்களுக்குப் பணம் அனுப்ப முடியாத கட்டுப்பாட்டுக் குள்ளாக்கப்பட்டனர்.

இப்போது, அங்கு வாணிக நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் உடனே விரட்டியடிக்கப்படத் தக்கவாறு முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இலங்கை அமைச்சர் குணசிங்கா, இலங்கையை இலங்கையர் மயமாக்குவதாகக் கூறிக் கொண்டு, இந்தியருக்குப் பெருந் துரோகம் இழைக்கிறார் என்றே கூறவேண்டும்.

இலங்கை, டிச. 22—

1948 ஜூலை முதல் தேதிக்குப் பிறகு இலங்கையில் வேலையிலமர்ந்திருக்கும் இந்தியர்கள், இலங்கைப் பிரஜைகளாயிராவிடில் உடனடியாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள். இத்தகைய தொரு நிபந்தனையை இந்திய வர்த்தகசபை சார்பில் செய்யப்பட்ட ஒப்பந்தம் வெளியிடுகிறது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தரப்பில் இலங்கை அமைச்சர் குணசிங்கா கையொப்பமிட்டார்.

இனி இலங்கைப் பிரஜைகளல்லாதவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் இலங்கைப் பிரஜைகளே கிடைக்காத வகையிலுள்ள வேலையானால், இலங்கை அரசாங்கத்தின் அனுமதி பெற்றே இந்தியரை வரவழைக்க வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தம் கூறுகிறது.

இதன்படி இலங்கை இனி இந்தியருக்கு எந்தவகையிலும் உதவியில்லாதவாறு மூடப்பட்டதென்றே கூறவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை இந்திய வர்த்தக சங்கம் எங்ஙனம் ஒப்புக் கொண்டதென்பதுதான் நமக்குப் புரியவில்லை. ஆனால் அது இலங்கையில் தனக்கு ஆகவேண்டிய வர்த்தகத்தையே கருத்தில்கொண்டு இவ்வாறு இந்தியரைப் பலி கொடுத்துவிட்டதென்றே கருத வேண்டியிருக்கிறது.

நிலைமை இவ்வாறாகி விட்டிருப்பதை இந்திய அரசாங்கமேனும் புத்திசாலித்தனமாகச் சமாளித்து, இந்தியரின் நலன்களை இலங்கையில் காக்க முன் வருமா? இலங்கை இந்தியர்கள் பெரும்பாலும் திராவிடர்களேயாகையால், இந்திய அரசாங்கம் இதில் எவருக்கு வந்திருந்தோ என்றிருந்து விடுமானால், திராவிட நாட்டிற்கு அது மகத்தான துரோகம் செய்வதாகவே முடியும்.

பர்மா சோஷலிஸ்ட் கட்சியில் பிளவு

கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கும் புதுக்கட்சி

ரங்கூன், டிச. 24—

பர்மா சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து சிலர் வெளியேறி ஒரு புதுக் கட்சியை ஏற்படுத்திக்கொண்டனர். இக்கட்சி தங்களைக் கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும், கிரெம்லினின் உத்தரவுகளை நிறைவேற்றி வைக்கக்கூடியது என்று கூறப்படுகிறது.

தாகின்-நு-வின் என்பவர்தான் புதுக்கட்சியின் தலைவர். பிரிட்டனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் பர்மாவை தளமாக உபயோகிக்க முயன்று வருகின்றன என்ற பிரசாரத்தை இவர் நடத்தி வந்தார்.

இந்த பிளவினால் அகில பர்மா விவசாயிகள் சங்கமும் பிளவுபட்டு ஒரு பகுதி இப்புதுக் கட்சியுடன் சேர்ந்துகொண்டு விட்டது. (இந்த விவசாயிகளின் சங்கத் தலைவர் தாகின்-நு-தான் சென்னை ஸானடோரியம் ஒன்றில் சிகிச்சைபெற்று வருகிறார்.

பர்மா வாக்காளர்களுக்குத் தேர்தலின்போது எக்கட்சியை ஆதரிப்பது என்று தெரியாதபடி குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை எஸ்டேட்டில் இந்திய தொழிலாளர்கள்

சிறுகச் சிறுக வேலையைவிட்டு நீக்க மசோதா

கொழும்பு, டிச. 24—

இப்போது இலங்கை எஸ்டேட்டில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களை நீக்கி, இலங்கையர்களையே வேலைக்கு வைக்க படிப்படியாக நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் மசோதா ஒன்று இலங்கை பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

Phone No .4502: Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2	சென்னை 25—12—50	மணி 23

காஞ்சி தி. மு. கழக மாநாடு

0

2-ம் நாள் நிகழ்ச்சிகள்

காஞ்சி, டிச. 24—

காஞ்சி திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு இன்று காலை 10-மணிக்கு தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் கூடியது. மாநாட்டுக்கு நேற்றையவிட இன்று அதிகமான மக்கள் கூடியிருந்தனர். பந்தலில் இடமில்லாததால் பந்தலுக்கு வெளிப்புறமுள்ள திறந்த வெளியிலும் மக்கள் கூடி, தலைவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். மேடை மீது உட்கார்ந்திருந்த கழக முக்கியஸ்தர்கள் பின்வருமாறு:—

தோழர்கள் பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி, மு. கருணாநிதி, அம்பில் தருமலிங்கம், பொன்மலை பாராங்குசம், டாக்டர் தருமாம்பாள் அம்மையார், சத்தியவாணி முத்து அம்மையார், தில்லை வில்லாளன், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், என். எஸ் இளங்கோ, காரைக்குடி இராமசுப்பையா, கஜேந்திரன், கே. ஆர். இராமசாமி, போளுக்குறிச்சி சோமசுந்தரம், காஞ்சி கல்யாணசுந்தரம், கே. கோவிந்தசாமி, ஈ. வே. கி. சம்பத், காஞ்சி சம்பந்தம், பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, முல்லை சக்தி, கண்ணதாசன், முல்லை எம். பி. வடிவேலு, ஏ. சித்தையன், சேலம் நாராயணசாமி, கா. அப்பாதுரை, அரக்கோணம் சஞ்சீவி, உடுமலை நாராயணகவி, நாகூர் எம். அனிபா, கே. ஆர். செல்லமுத்து, கே. ஏ. மதியழகன், மூதாட்டி இராமாமிருதத்தம்மையார், அலமேலு அப்பாத்துரை, சி. வி. எம். அண்ணாமலை, என். ஜீவரத்தினம், டி. எம் பார்த்தசாரதி மற்றும் பலர் வந்திருந்தனர். பின்னர் மாநாட்டுத் தலைவர் முதலில் பேசிய பிறகு நிகழ்ச்சி நிரலில் கண்டபடி கழக முன்னணி வீரர்களைப் பேசும்படி தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், கண்ணதாசன், சேலம் சித்தையன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை மற்றும் பலர் பேசினார்கள். (விவரம் பின்னர் வெளிவரும்) பிறகுமாநாட்டுக் காலை நிகழ்ச்சி பகல் 1-30 மணிக்கு முடிவுபெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி மாநாட்டுத் தீர்மானங்களை ஒன்றின் பின் ஒன்றாக கொண்டுவரப்பட்டு ஆதரித்துப் பலர் பேசியபின் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேறின. மாலை 5-30 மணிக்குப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் 'தற்கால நிலைமையும் அரசாங்கமும்' என்பதைப் பற்றிச் சுமார் 1-45 மணி நேரம் பேசினார். (முழுப்பேச்சு பின்னர் வெளிவரும்) பின்னர் தலைவரின் முடிவுரைக்குப் பிறகு மாநாட்டுப் பிற்பகல் நிகழ்ச்சி இரவு 7 மணிக்கு முடிவுபெற்றது.

இரவு 10 மணிக்கு அறிஞர் அண்ணா அவர்கள் இரணியனாக நடிக்கும் "நீதிதேவன்மயக்கம்" என்னும் நாடகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. நாடகத்திற்குப் பெருவாரியான மக்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்குப் பெண்கள் சுமார் 5000க்கு மேற்பட்டு வந்திருந்தனர். பெண்களுக்கென மாநாட்டார் தனியாக இடவசதி செய்துகொடுத்திருந்தது மிகவும் பாராட்டக்கூடிய விஷயம்.

குறிப்பு:—மாநாட்டுப் பேச்சாளர்களின் முழுப் பேச்சுக்களும், அறிஞர் அண்ணாவின் பேச்சும், மாநாட்டுத் தீர்மானங்களும் நாளை முதல் முறையே தினசரி மாலைமணியில் வெளிவரும். [ஆ-ர்]

இந்தியா-இலங்கை வர்த்தகம்

இடையூறுகளை அகற்ற ஏற்பாடு

கொழும்பு, டிச. 24—

இந்தியா-இலங்கை வர்த்தகம் சுமுகமாக நடைபெறுவதிலுள்ள இடர்களை நீக்க இருசர்க்கார்களின் பிரதிநிதிகளும் கலந்து பேசுவர்.

இந்திய சர்க்கார் ஏற்றுமதி கண்ட்ரோலர் தோழர் ஐ. கே. ஜா இலங்கைக்கு சீக்கிரமே செல்லவிருக்கிறார்.

மாலைமணி

சென்னை 25—12—50 திங்கட்கிழமை

நிர்வாக ஊழல்

நாட்டிலே பஞ்சம், நல்ல திட்டங்களுக்குப் பணமில்லை என்றால், வரிகள் மூலம் ஏராளமாகத் திரட்டப்படும் பணம் என்னுகிறதென்பதும், இதற்கு முன்னிருந்த ஆட்சியாளர்கள் இவ்வளவு வரிகளைப் போடாமலே இதைவிட நல்ல முறையில் மக்கள் தொல்லைக்குள்ளாகாதவாறு ஆட்சி நடத்தினரே என்பதும், மக்களையும் நல்ல முறையில் ஆட்சி செய்து, தாங்களும் சுரண்டிக்கொண்டு போகும் நிலைமைக்கு வசதியிருந்த இந்நாட்டில் ஓரே பஞ்சப்பாட்டு தோன்றும் நிலை ஏற்பட்டுவிட்டதற்குக் காரணம் என்னவென்பதும் பொது மக்கள் மனத்தைக் குழப்பும் செய்திகளாக ஆகிவிட்டன.

உண்மையில் நாட்டின் சீர்கேட்டுக்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிப்பதற்குப் பெரிய ஆராய்ச்சிகள் தேவையில்லை.

ஆட்சி பீடத்தில் வந்தமர்ந்திருப்பவர்களைப் பார்த்தால் போதும், நாட்டில் ஆட்சி சீர்கெடுவதற்குக் காரணம் என்னவென்பது புரிந்துவிடும், சென்னை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பிரகாசம் பிறர் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளையும், பிரகாசத்தின் மீது பிறர் சாட்டிய குற்றச்சாட்டுகளையும், இவை பற்றிய பொது விசாரணை நடத்தாமல், கட்சிச் சார்பற்ற ஒரு குழுவினரை நியமித்து அக்குழுவினரைக் கொண்டு இவ்வூழல்களைத் தீர விசாரியாமல், குற்றஞ்சாட்டிய பிரகாசத்தின் மீதே நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயன்ற செய்தி ஒன்றே நாட்டு நிர்வாகச் சீர்கேட்டுக்குரிய காரணத்தை நன்கு விளக்குகிறதன்றோ!

இவ்வாறு ஒரு நாட்டமைச்சர்கள் மீது ஊழல் குற்றங்கள் சுமத்தப்பட்டால், அவ்வமைச்சர்கள் உடனடியாகப் பதவியிலிருந்து விலகி, பொது விசாரணைக்குட்பட்டிருக்க வேண்டும். விசாரணையில் அவர்கள் குற்றமற்றவர்களெனத் தெளிவான பிறகு அவர்கள் பதவியிலமர்ந்திருக்க வேண்டும்; அல்லது பதவியைத் துறந்து மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி வீரர்களாகப் பதவியிலமர்ந்திருக்க வேண்டும் இந்த இரண்டும் செய்யப்படவில்லை. பதவியை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதில்தான் அவர்களுடைய மூளை வேலை செய்கிறதென்பதிலிருந்து நாட்டு நிலைமை நன்கு விளங்குகிறதல்லவா!

இதேபோன்று மத்திய அரசாங்கத்தின் நிலையும் ஒழுங்கில்லை. அங்கும் நிர்வாக ஊழல்கள் அளவு கடந்துவிட்டன. ஒரே ஒரு சணல் விவகாரத்தில்மட்டும் இந்திய அரசாங்கம் கோடிக்கணக்கில் அறியாமையின் காரணமாகப் பொருள் நஷ்டம் அடைந்திருக்கிறது. இது மட்டுமன்று மற்றத் துறையிலும் இந்திய அரசாங்க நிர்வாகம் பழங்கால நவாப் தர்பாராகவே இருக்கிறது என்பது இம்போது சிக்கனம் செய்யத் தொடங்கியிருப்பதிலிருந்து நன்கு தெரிகிறது. ஒவ்வோர் இலாக்காவிலும் அதிக ஆட்களும் அளவு கடந்த செலவினங்களும் அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணச் செலவுகளுமாக பெரும் பொருள் செலவிடப்பட்டு வந்தால், நாட்டின் முன்னேற்ற விவகாரங்களுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கும்?

10 கோடி ரூபாய் செலவில் அமைத்துவிட முடியுமென்று அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு வேலை துவக்கப்பட்ட சிந்திரி இராசயன உரத் தொழிற்சாலைக்கு இப்போது 23 கோடி ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டு, இம்மதிப்பு இன்னும் உயர்ந்துகொண்டே போகும் என்று கூறப்பட்டால், அரசாங்க நிர்வாகத்தின் ஊழலை என்னென்பது. இந்த ஒரு தொழிற்சாலை பற்றிய விவகாரத்தை அரசாங்கத்தால் சரிவர நடத்த முடியவில்லை. இத்தனைக்கும் கணக்குப் பார்க்க 8 அதிகாரிகள், செலவு செய்ய 12 அதிகாரிகள் மேற்பார்வை சிப்பந்திகள் அளவுக்கு மீறியவகையில் என்றெல்லாம் இருந்தும் இவ்வொரு தொழிற்சாலையின் நிர்வாகத்தைச் சரியானபடி கவனிக்க இந்திய அரசாங்கத்தால் முடியவில்லை என்றால், தொழில்களனைத்தும் தேசிய மயமாவதெனின், இந்த அரசாங்கப் பேர் வழிகள் என்ன செய்வார்கள்!

இதே போன்றதுதான் சென்னை நிலையும். பஸ் போக்குவரத்துத் தனிப்பட்டவர்களிடம் இருந்தபோதுள்ள கட்டணங்கள் இப்போது மிகுந்துவிட்டன, கட்டணங்களை இவ்வளவு உயர்த்தியும் பஸ் போக்குவரத்தானது அரசாங்கம் எதிர்பார்க்கும் அளவு—அல்லது, தனிப்பட்ட முதலாளிகள் அடைந்த அளவு ஆதாயம் பெற முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன? நிர்வாகம் நல்ல முறையில் இல்லாததுதான். தேவைப்படுமிடத்தில் தொழிலாளர் குறைவாக இருப்பர்; ஆனால், தேவையில்லாத இடத்தில் கணக்கர்கள் மீறியிருப்பர். இப்படியெல்லாம் நிர்வாகத்தில் பல வகை ஊழல்கள் இருப்பதால்தான் நம் நாடு எந்த வகையிலும் முன்னேற்றம் பெற முடியவில்லை, மக்களும் வறுமைத் துன்பத்திலிருந்து தப்ப முடியவில்லை. நாளுக்கு நாள் அல்லல் வளர்கிறது. எனவே, நாடு நலன் பெற வேண்டுமானால், வறுமை ஒழியவேண்டுமானல், மாகாண ஆட்சிகளிலும் சரி, மத்திய ஆட்சியிலும்சரி, நிர்வாகத் திறனுடையவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட வேண்டும்.

பசுத்தோல் போர்த்திய புலிகள்

(0)

நாட்டு மக்கள் நன்கு அறிவர்

(0)

வடநாட்டவருக்கு ஓட்டுப் போடாதீர்

வெள்ளைக்கோவில், டிச. 23—

தமிழ் நாட்டு மக்கள் மதியற்றவர்கள் என்ற நினைவிலேதான் காங்கிரஸார், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தால் கண்டவற்றை உளறி மக்களை மயக்கி இன்று பதவி பெற்றும் திண்டாட்ட மடைகிறார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் மக்கள் மறந்துவிட்டிருப்பர் என்ற போக்கில் மகிழ்ந்திருந்தார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்களின் தந்திரங்களைத் திராவிடர் இயக்கத்தார் தகர்த்து வருவதைக் கண்ட காங்கிரஸார் சோர்ந்து தவறான வழிகளில் திராவிடர்களை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

திராவிடர்களை மனம்போனபடி வசைபாடுவது, காலிகளை ஏவித் தொல்லை கொடுக்கச் சொல்வது, திராவிடரின் அரிய கொள்கைகளே தங்களுடைய கொள்கைகளுமாகும் என்று அறிவு நிறைந்த மக்களிருக்குமிடங்களில் பிரசாரம் செய்வது போன்ற தந்திரங்களை அவர்கள் கையாண்டு வருகின்றனர். அவர்கள் இம்முயற்சிகளில் பெருந்தோல்வி காணுகின்றனரெனினும் ஆசை யாரைவிட்டது எனவே, இறுதிவரை தங்களுக்குத் தெரிந்த வித்தைகளைக் கையாண்டு பார்க்கின்றனர்.

அண்மையில், தாராபுரம் தாலுக்காவைச் சேர்ந்த வெள்ளக்கோவில் தேர்தலில் காங்கிரசாரை எதிர்த்து சேட் ஒருவர் நின்றா. காங்கிரஸ் சார்பில் நின்றவர் நடராசக் கவுண்டர். காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்துப் பேசுகையில், "வடநாட்டான் சேட்-அவனுக்கு ஓட்டுப் போடாதீர்கள். நம்மவர் நடராசக் கவுண்டருக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று பேசினராம். இனி இப்படிப் பேசியாவது மக்களை மயக்கலாம் என நினைக்கிறார்கள் போலும். நடத்தட்டும்.

ஆனால் காங்கிரஸ் புலிகள் பசுத்தோல் போர்த்திக்கொண்டு வந்திருக்கின்றன என்பதை மக்கள் நன்கறிவர். தமிழ் நாட்டை, தமிழ் மக்களை வடநாட்டான் சுரண்டினாலும், தமிழர்கள் சுரண்டுபவர்களுக்கு உடந்தையாக இருந்தாலும், இருவரும் திராவிடத்தின் பகைவரே யாவர். திராவிடத்தை எவன் சுரண்டினலென்ன? எவன் காட்டிக் கொடுத்தாலென்ன? இவ்வாறு செய்பவர்கள் தமிழர்களாகவேயிருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியவர்களே என்பதைப் பொது மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். எனவே, தமிழன் வேடத்தில் வந்து மீண்டும் காங்கிரஸ்காரர்கள் மக்களை மயக்க முயல்வதென்பது முடியாத காரியமாகும்.

நெசவாளி உடை

நாட்டிலே ஒரு குலம் பாடுபடாது உண்டு உறங்கிக் கிடக்க, மற்றவர் உடல் தேய, உள்ளமும் உணர்வும் தேய, உழைத்துக் கெடுவதா? இன்று தோழர்கள் நெசவில் நெய்வது நூற்றுக்கு நூறு, 60 க்கு 60 என்ற நயமான (நூல்) துணிகள், பொள்ளாச்சி பார்டர், பெங்களூர் பேஷன் என்ற புதுப் பது மாதிரிகள்; ஆனல் அவர்கள் அணியும் ஆடையின் தரமோ 30 க்கும் குறைவானது.

—அறிஞர் அண்ணா

பேர்னட்ஷாவிற்கு அவைக்கூச்சம் உண்டு

நியூயார்க், டிச. 24—

பெர்னட்ஷா மிகவும் அவைக்கூச்சம் உள்ளவர் என்பதை, பிரபல தத்துவ ஞானி பெட்ராண்ட் ரஸ்ஸல் வெளியிட்டிருக்கிறார்.

தனக்கு பெர்னட்ஷாவை 50 ஆண்டுகளுக்கு முந்தியே தெரியும் என்றும் அவர் 20 நண்பர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் தன் நாடகம் ஒன்றைப் படித்துக்காட்டுகையில் மிகவும் வெட்கப்பட்டு வெளியே சென்று விட்டார் என்றும் கூறினர்.

சீன கடல் கொள்ளைக்காரர்கள்

குலாலம்பூர், டிச. 24—

மலாக்கா ஜல சந்தியில் கடல் கொள்ளைக்கார கூட்டமொன்று ஒரு தோணியை வழி மறித்து அதிலிருந்த ரூபாய் 1200 மதிப்புள்ள பொருள்களைக் கடத்திச் சென்று விட்டனர்.

கழக நடவடிக்கைகள்

ஊத்துக்காடு:—3-12-50ல் திராவிட முன்னேற்ற கழக துவக்கவிழா தோழர் சங்கரளங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் எஸ். முத்து, கே. எஸ். ராஜமான் முதலியவர்கள் கலந்துகொண்டார்கள். செயலாளராக திருமாலளகு, உதவி செயலாளர் பாப்பான், பொருளாளர், ஆ. கருப்பணன், விளம்பர உறுப்பினர் ரா. தேவன், உதவி விளம்பர உறுப்பினர் முகம்மதுசிக்கந்தர், முதலியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

ஆரணி:—16-12-50-ல் டி. டி. அரசு தலைமையில்கூடி, தி. மு. க-வின் செயற்குழு கூடியபோது, பொங்கல் விழா ஜனவரி 7, 8 தேதிகளில், மு. கருணாநிதி, டி. கே. சீனுவாசன், எ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன் இவர்களை அழைத்து நடத்துவதென முடிவு செய்தது. பிறகு தீர்மானங்கள் நிறைவேற கூட்டம் இனிது முடிவடைந்தது.

* * *

மணப்பாறை: 17-12-50-ல் தி. மு. க. அமைப்புக் கூட்டம் சா. சமுத்தரப்பாண்டியன் தலைமையில் கூடி, செயலாளர் சா. சமுத்திரபாண்டியன், துணைச் செயலாளர் வெ. கு. சி. வீராசாமி, பொருள் உறுப்பினர் தங்கநாயகம், விள உறு. ஆர். கிருட்டினசாமி, துணை வி. உறு. வ. ச. மோ. வேலன் இவர்களைத் தேர்ந்தெடுத்தபின் தீர்மானங்கள் நிறைவேற நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சலகண்டபுரம்: 19—12—50—ல் தி. மு. க-வின் செயற்குழு அ. மு. அண்ணாமலை தலைமையில் கூடி தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அவை: சேலம் மாவட்ட மாநாடுகூட்ட 150 ரூபாய் வசூலித்து அனுப்புவதெனவும், சேலம் மாவட்ட மாநாட்டை ஒட்டி மாநாட்டிற்கு முன்னதாக பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைக்கொண்டு 15 நாட்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்விக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேறியபின் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

திருவாரூர்:—19-12-50-ல் தி. மு. க-வின் செயற்குழுகூடி, அண்ணாவின் சொத்தை ஜப்தி செய்ததைக் கண்டித்தும், பெரியார் காரை ஜப்தி செய்ததைக் கண்டித்தும் சர்க்காரின் அடக்குமுறைப் போக்கைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

மங்கலலூர்: 20—12 50 ல் கோபாலகிருட்டினன் தலைமையில் தி. மு. க. செயற்குழு கூடி ஆண்டு விழா கூட்டத்தின் வரவு செலவு கணக்குப் பரிசீலனைச் செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற நன்றிகூறி கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

மதுரை:—22-10-50-ல் கே. எஸ். இராசமான் தலைமையில்கூடி, தி. மு. கழக மாணவ மறுமலர்ச்சி மன்றத்திற்கு கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் குலாம்தீன், துணை நெடுஞ்சேரலாதன். பொதுச்செயலாளர் வசனப்பித்தன், பொருளாளர் குருசாமி. வி. உறு. பாண்டியன். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சுண்டக்காமுத்தூர்:—17-12-50--ல் தி. மு. க-வின் செயற்குழு சொ. ரங்கசாமி தலைமையில் கூடி அடுத்த ஆண்டுக்கு செயலாளர் சு. கு. தாண்டவன், துணை ஆ. பழனிச்சாமி, பழனியப்பன் விள: உறு, சு. வி. பழனிச்சாமி, பொ. உறு. ர. மாணிக்கம் இவர்களைத் தேர்ந்தெடுத்தபின் தீர்மானங்கள் நிறைவேற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

ஆலடி கிராமம்:—(தெ. ஆ.); 21-12-50-ல் தி. மு. க. கிளை அமைக்க கே. ஜெயராமன் தலைமையில்கூடி, தலைவர் நா. ரா. இராஜசுந்தரம், செயலாளர் கே. ஜெயராமன், துணை சாமு, இராமசாமி, பொ. உறு. தி. நா. வாசுதேவன், வி. உறு த. ரங்கராஜன் இவர்கள் தேர்ந்தெடுத்தபின் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

மேட்டுப்பாளையம்: 16-12--50--ல தி. மு. க. நிறுவப்பட்டது. செயலாளர் வ. கண்ணன், துணை மு. ர. கிருஷ்ணன், பொருள் உறு. தி. மு. கணேசன், வி. உறு. சு. நாகப்பன் இவர்களைத் தேர்ந்தெடுத்தபின், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாணவர் மன்றம் நிறுவப்பட்டது. பிறகு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

பொள்ளாச்சி:—20-12-50 அன்று தோழர் ராமு தலைமையில் தி. மா. மு. கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. 1. அண்மையில் சென்னையில் நடந்த தி. மா. மு. கழக மாநாட்டின் தீர்மானங்களை இக்கூட்டம் வரவேற்கிறது. 2. இத்திங்களில் பொள்ளாச்சி (தாலுகா) வட்டாரத்திலுள்ள கிராமங்களில் பிரசாரம் செய்ய ஒரு மாணவர் குழு அமைக்கப்பட்டது. 3. தைப்பொங்கலுக்காக ஒரு கையேடு தைத்திங்கள் முதல் நாள் வெளியிடுவதென்றும் அதற்கு வெளியூர்களிலிருந்துவரும் கருத்தோவியங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற இத்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபின்செயலாளர் நன்றிகவில கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு: கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வோரும், கையேட்டுக்காக கதை, கட்டுரை, காவியம் அனுப்புவோர் பின்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

மு. சீனுவாசன்
15, அன்சாரி தெரு
பொள்ளாச்சி.

"பேசும் புத்தகங்கள்"

லண்டன், டிச. 24—

புத்தகத்தைப் பிரித்து வைத்துப் படிக்க முடியாத சோம்பேறிகளுக்கென்றே பேசும் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை வேறு ஒன்றுமில்லை, கிராமபோன்ரிக்கார்டுகள் [illegible]ன்?

இதைத் தயாரிப்பவர்கள் சோம்பேறித்தனமாகவுள்ளவர்களுக்கு வசதி செய்து தருவதின் மூலமே நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று கூறுகின்றனர்.

கட்டிட நிதிக்கு கலைவாணர் உதவும்
கலை நிகழ்ச்சி!

"அழகிரி நினைவு மாளிகை" அமைக்க
திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென
ஜனவரி 7உ ஞாயிறு மாலை 6 மணிக்கு
திருவாரூர் பேபி டாக்கீசில்
கலைவாணர்
திரு. என். எஸ். கிருஷ்ணன்
அவர்கள் தனது குழுவினருடன் நிகழ்த்தும்
'உத்தமர் காந்தி' (வில்லுப்பாட்டு)
'கிந்தனூர்' (கதை)

திபெத்தில் ஒரு மனைவிக்குப் பல கணவர்கள்

(o)

சமூக நிலையை அரிய கிரீஸ் இளவரசர் ஆவல்

(o)

இதுவரை அனுமதி கிடைக்கவில்லை

கல்கத்தா, டிச. 24—

பல மலைஜாதியினரிடையேயுள்ள சமூக பழக்க வழக்கங்களைக் குறித்து தகவல் சேகரித்து ஆராய்ச்சி நடத்திவரும் கிரீஸ் இளவரசர் பீட்டர் திபேத்தில் சென்று தன் ஆராய்ச்சிகளை நடத்தவிரும்புகிறார். இதுவரை இதற்கான அனுமதி இவருக்குக்கிடைக்கவில்லை. திபேத்தில் ஒரு மங்கையைப்பல ஆண்கள் மணம் புரியும் வழக்கம் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இவரும், மற்றும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இவர் சகாக்களும் திபேத்தியர் மொழியைக் கற்றுவருகிறார்கள்.

மத்திய ஆசியாவில் பலவித ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட டேனிஷ் குழுவினர் தங்கள் வேலை முடிந்து ஊர் திரும்பிவிட்டதாகத் தெரிகிறது.

இந்த குழுவினர் பல அரிய செய்திகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கிரிப்ஸ் உடல் நிலைமை

ஜூரிச், டிச. 24—

இங்கு பிர்செர் கிளினிக்கில் சிகிச்சைப் பெற்றுவரும் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸுக்கு உடல் நிலைமை மோசமாகி வருவதாக கூறப்படுகிறது.

இவருக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் கிருஸ்துமஸ் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன,

தோழர் ஆட்லி தனிப்பட்ட முறையில் அவர் உடல் நலத்தை விசாரித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

கிரிப்ஸுக்கு முதுகு தண்டுஎலும்பில் ஏற்பட்ட வியாதி இதுவரை எவ்விதத்திலும் குணப்பட்டதாகத் தெரியவில்லை.

சர். தியாகராயர் நினைவுவிழா

சென்னை, டிச. 24—

20—12—50ல் தண்டையார்பேட்டை எம். கே. டி. சுப்பிரமணியம் இல்லத்தில் சென்னையின் பல பாகங்களிலிருந்தும்பலபார்ப்னரால்லாத மாணவர்கள், அதிகாரிகள், வர்த்தகர்கள் கூட்டம் நடைபெற்றது. சுமார் 100 அங்கத்தினர்கள் வந்திருந்தனர். அதுபோது தோழர் புண்ணியகோட்டி தலைமை வகித்தார். அதுபோது சர் தியாகராயர் நினைவுக் கழகம் வட சென்னையில் ஏற்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. கூடிய சீக்கிரம் திறப்பு விழா செய்வதென்று தற்காலிக செயலாளராக எம. கே. டி. சுப்பிரமணியம் அவர்களை நியமித்து எல்லா அதிகாரங்களும் வழங்கி தீர்மானத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

29, 30—12—50

நாஞ்சில் (நாகர்கோயில்)
தி. மு. க. முதல் மாநாடு.

31—12—50

வளவனூர்
மா. இளஞ்செழியன்,
அக்கிப்பேட்டை
(பெங்களூர் சிடி):
சி. பி. சிற்றரசு, புலவர் மணி, எழிலன், அ. கு. பஞ்சாட்சரம்.

ஆசிரியருக்கு முடங்கல்

உணர்ந்தேன்

ஐயா நான் இதற்குமுன் காங்கிரசில்தகுதிபெற்ற உறுப்பினராகவும், (ரசீது எண் 47283) தமிழரசுக் கமிட்டியில் (ஈரோடு கமிட்டியில்) உறுப்பினராகவும் இருந்து தொண்டாற்றி உள்ளேன். ஆனால் இன்றைய நிலையில் (நம் நாட்டிற்கும்) திராவிட நாட்டிற்கும் திராவிட இனத்திற்கும் தேசியத்தின் பேரால் இழைக்கும் துரோகம், காட்டிக் கொடுக்கும் செயல், வடநாட்டுச் சுரண்டலுக்கு வாங்கும் வக்காளத்து மற்றும் திராவிட இயக்கத் தலைவர், பேச்சாளர்கள் ஆகியோர்களைப்பற்றி இழிவாகப் பேசும் தன்மை, (நேர்மையும் ஒழுக்கமுமற்ற பேச்சுக்கள்) அதற்காகவே தமிழரசுக் கழக வெளியீடுகள் கிளம்பி உள்ளதையும் கண்டு வெட்கமும் வேதனையும் அடைந்து தமிழ் தமிரசு என்று பேசிக்கொண்டு தமிழர்களுக்குத் துரோகமானதும், கீழ்தரமானதுமான காரியத்தில் தமிழரசுக் கழகத்தினரும் காங்கிரஸ் காரர்களும் இறங்கிவிட்டார்கள் என்பதை உணர்ந்து நான் காங்கிரசில் தகுதிபெற்ற உறுப்பினராயிருப்பதையும் தமிழரசுக் கழக கமிட்டி உறுப்பினர் பதவியையும் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட எல்லா தொடர்புகளையும் அறுத்துக்கொண்டு, இராசினாமா செய்துவிட்டு திராவிடர் இயக்கத்தில் சேர்ந்து நாட்டிற்கு என்னாலான சிறிய தொண்டினைச்செய்வதாகவும் அறிவிக்கிறேன்.

ஈரோடு 20—12—50 } சி. முத்துசாமி

* * *

லஞ்ச ஒழிப்பு

ஐயா,

இன்று நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது; நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுவருகிறது. விலைவாசிகளும் உயர்ந்துகொண்டே வருகிறது. நிலைமை இவ்வாறு இருந்தால், பொது மக்கள் எப்படி பிழைப்பது அதிலும் வேலையில்லாத் திண்டாட்டம்தான்படிப்படியாக உயருகிறது. கடந்த சில திங்களுக்கு முன்னர் நான் வேலையில்லாமலிருந்த பொழுது ஒருவரை வேலை கேட்டேன். அவர் சொன்னார், ரூ. 50 கொடுத்தால் வேலைக்குவைக்கிறேன் என்றார். அப்படிக் கொடுத்தும் அதை வாங்கிக்கொண்டு, 'இன்று இல்லை, நாளை வா' என்று நயவஞ்சகமாய்ப் பேசுகிறார்! சில நாட்களுக்கு முன் ஒரு தேசிய தினப் பதிப்பில் வேலைசெய்துகொண்டிருந்த 'போர்மெனை' எடுத்துவிட்டதாக வதந்தி உலவியது; காரணம் என்னவென்று கேட்டால் லஞ்சம் வாங்கியதுதான் காரணம் என்கிறார்கள். பத்திரிகையில் கள்ளமார்க்கெட்டையும், லஞ்சத்தையும் ஒழித்து விடுவதாக அறிக்கைகள் வருகின்றன. வந்துதான் என்ன பயன். பெரிய ஆசாமிகளே லஞ்சம் வாங்குகிறார்களே!

சென்னை—1 21-12-50 } டி. எஸ். வாசன்.

பம்பாய் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம்

முதலாண்டு விழா

நிகழும் 1950, டிசம்பர் மாதம் 16, 17 தேதிகளில் மேற்படிச் சங்கத்தின் முதலாண்டுவிழா பம்பாய், தாராவி, பங்களாவாடி பந்தலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தாய்மார்கள் உட்பட 5000க்குமேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். விழாவிற்கு சங்கத்தின் தலைவர் தோழர் பி. டி. போராலே அவர்கள் தலைமை தாங்கினர்.

தோழர்களான ஆர். டி. பண்டாரே, கு. பெ. துரைசாமி, சு. பி. பால் ராஜ். மே. அ நடராஜன், ந. சிவபாண்டியன். ஜி. ஜி, பாத்தன்கர் முதலியவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. காரியதரிசி பி. எஸ். அருணாசலம் அவர்களால் சமர்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிறகு, தோழர்களான உ. சி. முத்தையா. ஆ. மாணிக்கம் ஆ. சு. முத்தை குழுவினரால் நெடுங்குழல் இசையரங்கு நடத்தப்பட்டது.

பின், தோ, ப. தொழிலாளர்களுக்கு ஒரு மாதச் சம்பளம்போனசாக தரப்பட வேண்டுமென்றும் பேக்டெரிவிதிப்படி சம்பளத்துடன் ஓராண்டு விடுமுறை கொடுக்கப்பட வேண்டுமென்றும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்குதல் கூடாதென்றும் மாதச் சம்பளம் முறையே ரூ.90 65. ஆக இருக்க வேண்டுமென்றும் வேலையளவு கூலி பெறும் தொழிலாளர்களுக்கு தினசரிப் பஞ்சப்படி ரூ. 1-8-0 ஆக தரப்படவேண்டுமென்றும் ஒருமாத கால முன் அறிவிப்பு இன்றியாரையும் வேலையிலிருந்து நீக்குதல் கூடாதென்றும் தோல் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்திய குடியரசை கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக, காரியதரிசி பே. சு. பெருமாள் அவர்களால் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.